DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.240/2024

Deposition of witness: LW9/PW6

| | | | |
|---|---|---|---|
| Name | பரமசிவம், சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | இராமலிங்கம் | Village | |
| Age | 59 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **25.02.2026.** | | | |

(Accused absent U/s.317 PFA)

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது நெய்வேலி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் முத்தாண்டிக்குப்ப காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 24.07.2023 அன்று, 13.00 மணியளவில் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ராமலிங்கம் மகன் வடிவேல் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.188/2023 இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் மனுவையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வெங்கடேசன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** உதவி ஆய்வாளர் என்னை கடந்த 31.08.2023 அன்று விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.4 கொடுத்த தவறான புகாரை பெற்று, நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜரில்லா எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.